# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 1-5 - வளவேழ்

**(ஆழ்வார் எம்பெருமானது வைலக்ஷண்யத்தை அனுஸந்தித்து அகலத் தேட, எம்பெருமான் தன்னுடைய சீலகுணத்தாலே ஆழ்வாரைச் சேர்த்துக் கொள்ளுதல்)**

2719 * வளவேழ் உலகின் முதலாய * வானோர் இறையை * அருவினையேன்
களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட * கள்வா! என்பன் பின்னையும் **
தளவேழ் முறுவல் பின்னைக்காய் * வல்லானாயர் தலைவனாய் *
இளவேறேழும் தழுவிய * எந்தாய்! என்பன் நினைந்து நைந்தே 1

2720 நினைந்து நைந்து உள்கரைந்து உருகி * இமையோர் பலரும் முனிவரும் *
புனைந்த கண்ணி நீர் சாந்தம் * புகையோடு ஏந்தி வணங்கினால் **
நினைந்த எல்லாப் பொருள்கட்கும் * வித்தாய் முதலில் சிதையாமே *
மனஞ்செய் ஞானத்து உன் பெருமை * மாசூணாதோ? மாயோனே! 2

2721 மாயோனிகளாய் நடை கற்ற * வானோர் பலரும் முனிவரும் *
நீ யோனிகளைப் படை என்று * நிறை நான்முகனைப் படைத்தவன் **
சேயோன் எல்லா அறிவுக்கும் * திசைகள் எல்லாம் திருவடியால்
தாயோன் * எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன் * தானோர் உருவனே 3

2722 தானோர் உருவே தனி வித்தாய்த் * தன்னில் மூவர் முதலாய *
வானோர் பலரும் முனிவரும் * மற்றும் மற்றும் முற்றுமாய் **
தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி * அதனுள் கண்வளரும் *
வானோர் பெருமான் மாமாயன் * வைகுந்தன் எம்பெருமானே 4

2723 மானேய் நோக்கி[1] மடவாளை * மார்வில் கொண்டாய்! மாதவா! *
கூனே சிதைய உண்டைவில் * நிறத்தில் தெறித்தாய்! கோவிந்தா! **
வானார் சோதி மணிவண்ணா! * மதுசூதா! நீ அருளாய் * உன்
தேனே மலரும் திருப்பாதம் * சேருமாறு வினையேனே 5

2724 வினையேன் வினைதீர் மருந்தானாய்! * விண்ணோர் தலைவா! கேசவா! *
மனைசேர் ஆயர் குலமுதலே! * மாமாயனே! மாதவா! **
சினையேய் தழைய மராமரங்கள் * ஏழும் எய்தாய்! சிரீதரா! *
இனையாய்! இனைய பெயரினாய்! * என்று நைவன் அடியேனே 6

2725 அடியேன் சிறிய ஞானத்தன் * அறிதல் ஆர்க்கும் அரியானை *
கடிசேர் தண்ணண்துழாய்க் * கண்ணி புனைந்தான் தன்னைக் கண்ணனை **
செடியார் ஆக்கை அடியாரைச் * சேர்தல் தீர்க்கும் திருமாலை *
அடியேன் காண்பான் அலற்றுவன் * இதனில் மிக்கோர் அயர்வுண்டே? 7

2726 உண்டாய் உலகேழ் முன்னமே * உமிழ்ந்து மாயையால் புக்கு *

[1] நோக்கின்

உண்டாய் வெண்ணெய் சிறுமனிசர் * உவலையாக்கை நிலை எய்தி **
மண் தான் சோர்ந்ததுண்டேலும் * மனிசர்க்காகும்பீர் * சிறிதும்
அண்டா வண்ணம் மண் கரைய * நெய்யூண் மருந்தோ? மாயோனே! 8

2727 மாயோம் தீயவலவலைப் * பெருமா வஞ்சப் பேய் வீய *
தூய குழவியாய் விடப்பால் அமுதா * அமுது செய்திட்ட
மாயன் ** வானோர் தனித் தலைவன் மலராள் மைந்தன் * எவ்வுயிர்க்கும்
தாயோன் * தம்மான் என்னம்மான் * அம்மா மூர்த்தியைச் சார்ந்தே 9

2728 சார்ந்த இருவல் வினைகளும் சரித்து * மாயப் பற்றறுத்து *
தீர்ந்து தன் பால் மனம் வைக்கத் திருத்தி * வீடு திருத்துவான் **
ஆர்ந்த ஞானச் சுடராகி * அகலம் கீழ் மேல் அளவிறந்து *
நேர்ந்த உருவாய் அருவாகும் * இவற்றின் உயிராம் நெடுமாலே! 10

2729 * மாலே! மாயப் பெருமானே! * மாமாயனே! என்றென்று *
மாலேயேறி மாலருளால் * மன்னு குருகூர்ச் சடகோபன் **
பாலேய் தமிழர் இசைகாரர் * பத்தர் பரவும் ஆயிரத்தின் *
பாலே பட்ட இவை பத்தும் * வல்லார்க்கு இல்லை பரிவதே 11

**அடிவரவு:** வளவேழ் நினைந்து மாயோன் தானோர் மானேய் வினையேன்
அடியேன் உண்டாய் மாயோம் சார்ந்த மாலே பரிவது